செ.வெ.எண்: 150 26/2/09

## மாநில அரசு அலுவலர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு.

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு . 26.2.2009

மத்திய அரசு அலுவலர்களுக்கு அகவிலைப் படியினை உயர்த்தி இன்று மத்திய அரசு அறிவித்திருப்பதை தொடர்ந்து – தமிழக அரசின் அலுவலர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் அகவிலைப்படி உயர்த்தப்படும் என்றும் – மத்திய அரசின் ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு, அது பற்றிய முழு விவரங்களைத் தெரிந்து கொண்டு, அதன் அடிப்படையில் தமிழக அரசும் தனது அலுவலர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும் அகவிலைப் படியினை உயர்த்தும் என்றும் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மருத்துவ மனையில் இருந்தவாறு, நிதியமைச்சருடனும், நிதித் துறை செயலாளருடனும் கலந்தாலோசித்த பிறகு அறிவித்துள்ளார். மத்திய அரசு அறிவித்தவாறே இந்த அகவிலைப் படி உயர்வினை முன் தேதியிட்டு 1–1–2009 முதல் அரசு அலுவலர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் ரொக்கமாக வழங்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை ***
தலைமைச் செயலகம், சென்னை-9